**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| வழக்கு எண்: C.C. 133/2025 | காவல் நிலையம்: கும்மிடிப்பூண்டி | |
|---|---|---|
| பெயர் : ராமச்சந்திரன் | அ.சா. 2 | நாள் : 03.11.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா. 2 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமச்சந்திரன் | தாலுக்கா | : | கும்முடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | துரைசாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | மங்காவரம் | வயது | : | 65 |

( எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் மங்காவரம் கிராமத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 சிவாவை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்காரர் ஆவார். 05.01.2021 ம் தேதி மங்காவரம் பொன்னியம்மன் கோவிலில் நகை திருடு போயிருந்தது. அதில் தலா கால் சவரன் எடை கொண்ட இரண்டு குண்டும், அரை சவரன் எடைகொண்ட ஒரு மாங்கல்யமும் திருடு போயிருந்தது. இது சம்பந்தமாக சிவா கும்மிடிப்பூண்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்திருந்தார். அந்த புகார் சம்பந்தமாக கும்மிடிப்பூண்டி போலிசார் மதியம் 2 மணிக்கு மேற்படி பொன்னியம்மன் கோவிலுக்கு வந்தார். அப்போது ராஜேந்திரன் என்பவரும் இருந்தோம். அப்போது அங்கு போலிசார் வரைபடம் வரைந்தார். பின்னர் ஆவணம் தயார் செய்து பின்னர் காவல் நிலையத்திற்கு வரவழைத்து கையெழுத்து வாங்கினார்.

**(சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதவேண்டும் என்று அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை பரீசிலித்து அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கோவிலுக்கு வந்து வரைபடம் வரைந்தவர் எஸ் ஐ நிலகண்டன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரைபடம் தான் என் முன்னிலையில் வரைந்தார் என்றால் சரிதான். பின்னர் அவரிடமிருந்த லேப்டாப்பில் சில விவரங்களை டைப்

செய்தார் என்றால் சரிதான். பின்னர் காவல் நிலையம் சென்று பிரிண்ட் எடுத்து கொண்டு மீண்டும் கோவிலுக்கு வந்தார் என்றால் சரிதான். கோவிரில் வைத்து தான் என்னிடம் கையொப்பம் பெற்றார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். **(அந்த மாதிரி வரைபடத்திலுள்ள முதலாவது கையெழுத்து அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. உதவி ஆய்வாளர் காவல் நிலையம் சென்று பிரிண்ட் எடுத்து கொண்டு வரும் வரை நானும் ராஜேந்திரனும் கோவிலில் தான் இருந்தோம் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பிறகு ராஜேந்திரனும் அதில் 2 வதாக சாட்சி கையொப்பம் இட்டார் என்றால் சரிதான். வரைபடம் நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன விவரம் இருந்தது என்று தற்சமயம் எனக்கு ஞாபகமில்லை என்றால் சரிதான். பின்னர் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் நான் குறிப்பிட்ட உதவி ஆய்வாளரின் பெயர் எனக்கு தெரியாது என்றாலும் முதல் விசாரணையின் போது தான் தெரியும் என்றால் சரியல்ல எனக்கு அப்போதே தெரியும். போலிசார் என்னை காவல் நிலையம் அழைத்து சென்று அங்கு பிரிண்ட் எடுத்து என்னிடம் கையொப்பம் பெற்றார் என்றால் இல்லை, நான் கோவிலிலேயே இருந்தேன் அங்கு வந்து தான் கையொப்பம் பெற்றார். நான் முதல் விசாரணையில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் சரியாக தான் சாட்சியம் அளித்துள்ளேன். நான் கோவிலுக்கு செல்வதற்கு முன்பாகவே அங்கு 10–20 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் இல்லை, நான் சென்றபிறகு தான் வந்தார்கள். என்னுடன் சேர்த்து 4–5 நபர்கள் தான் அங்கு இருந்தோம். சிவா அவர்களுடன் சேர்ந்து நானும் ஊர்காரர்களும் சேர்ந்து காவல் நிலையம் சென்றோம் என்றால் இல்லை, நான் செல்லவில்லை. யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியும். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கையொப்பம் இட்ட ஆவணத்தை படித்து பார்த்தேன். அதில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– ராமச்சந்திரன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R

Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.11.03 12:23:16 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி